பெருநகர சென்னை மாநகராட்சி,
வருவாய்த் துறை,

வ.து.ந.க.எண்.தொ.வ/3799/2013, நாள் 25.05.2018

சுற்றறிக்கை

| | |
|---|---|
| பொருள் | தொழில் வரி – பெருநகர சென்னை மாநகராட்சி – வருவாய் துறை –தொழில் வரி –1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் இரண்டாம் திருத்த விதிப்படி – 01.04.2018 முதல் திருத்தியமைக்கப்பட்ட தொழில் வரியினை பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்வது – தொழில்கள் வணிகங்கள் மற்றும் பணிகள் சட்டத்தின் கீழ் தொழில்வரி வசூல் செய்ய அறிவுறுத்தல் – தொடர்பாக. |
| பார்வை | 1. அரசு ஆணை எண்.65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.04.1998.<br>2. அரசு ஆணை எண்.249, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28.12.1998.<br>3. அரசு ஆணை எண்.11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.01.1999.<br>4. அரசு கடித எண்.எம்.எஸ்/45/2017, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை, நாள் 27.04.2018.<br>5. மன்றத் தீர்மான எண்.382/2018, நாள் 11.05.2018. |

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசு ஆணைகளின்படியும், மற்றும் மாமன்றத் தீர்மானத்தின்படியும் சென்னை மாநகராட்சி மற்றும் மத்திய / மாநில அரசுகளில் பணியாற்றும் பணியாளர்களின் ஊதியத்திலிருந்து, ஒவ்வொரு நிதி அரையாண்டிற்கும் ஆகஸ்ட் மற்றும் ஜனவரி மாதங்களில் பிடித்தம் செய்யப்பட்ட தொழில் வரியினை முறையே செப்டம்பர் மற்றும் பிப்ரவரி மாதங்களில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.

தற்போது மாமன்றத் தீர்மான எண்.382/2018, நாள் 11.05.2018ன்படி தொழில்வரி திருத்தியமைக்கப்பட்டு 01.04.2018 (முதல் அரையாண்டு 2018–19) முதல் தொழில்வரி உயர்த்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி மன்றத் தீர்மானத்தின்படி நடப்பு நிதியாண்டின் 2018–19 (முதலாம் அரையாண்டிற்கு) தொழில் வரியினை அரசு பணியாளர்களின் ஆகஸ்ட் மாத ஊதியத்தில் கீழ்காணும் அட்டவணையின்படி பிடித்தம் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

அட்டவணை

| வ.எண். | அரையாண்டுக்கான வருமானம் | | 01.04.2018 முதல் திருத்தியமைக்கப்பட்ட அரையாண்டு தொழில்வரி ரூ. |
|---|---|---|---|
| | முதல் ரூ. | வரை ரூ. | |
| 1 | 21,000 வரை | -- | -- |
| 2 | 21,001 | 30,000 | 135/– |
| 3 | 30,001 | 45,000 | 315/– |
| 4 | 45,001 | 60,000 | 690/– |
| 5 | 60,001 | 75,000 | 1025/– |
| 6 | 75,001/–மற்றும் அதற்கு மேல் | – | 1250/– |

மேற்படி பிடித்தம் செய்யப்பட வேண்டிய திருத்தியமைக்கப்பட்ட தொழில் வரியினை செப்டம்பர் மாதம் – 2018 இரண்டாம் வாரத்திற்குள் வருவாய் அலுவலர், வருவாய்த் துறை தலைமையகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து வட்டார துணை ஆணையர்கள் / துறைத் தலைவர்கள் / மண்டல அலுவலர்கள் மற்றும் கணக்கு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/– இரா. லலிதா,
துணை ஆணையர் (வ(ம)நி).

பெறுநர்:

அனைத்து துறைத் தலைவர்கள்,
மண்டல அலுவலர்கள், மண்டலம் 1 முதல் 15 வரை.
கணக்கு அலுவலர்கள், மண்டலம் 1 முதல் 15 வரை.

நகல்:

1. ஆணையர் அலுவலகம்.
2. துணை ஆணையர் (பணிகள்) (சுகாதாரம்) (வருவாய் மற்றும் நிதி) (கல்வி).
3. வட்டார துணை ஆணையர் (வடக்கு, மத்திமம் மற்றும் தெற்கு).
4. நிதி ஆலோசகர்,
5. கணினி மையம் மற்றும் கோப்பு.

/ உண்மை நகல் /

வருவாய் அலுவலர்.